**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

**OS.No.**40/2013

**Date:**09.08.2021 **DW.1**(ஏகப்பன்)

**1-ம் பிரதிவாதி தரப்பு கு.வி:**

என் தகப்பனார் 1-ம் பிரதிவாதி சிங்காரத்திற்கு பூர்வீக ஊர் நாட்டரசன்கோட்டை என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதியின் சிங்காரத்தின் அப்பா பெயர் சாத்தப்பச் செட்டியார். மேற்படி சாத்தப்பச் செட்டியார் எப்போது இறந்தார் என்ற விவரம் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான், எனது தந்தை, என் மூதாதையர்கள் மற்றும் என் குடும்பத்தார்கள் அனைவரும் நாட்டுக் கோட்டை நகரத்தார் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நகரத்தார் பிரிவினரின் பூர்வீகத் தொழில் வட்டிக்கு பணம் கொடுக்கல், வாங்கல் தொழில் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் தந்தை என்ன தொழில் செய்து வந்தார், எங்கு தொழில் செய்து வந்தார் என்றால் அது தெரியாது. எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்தே எனக்குத் தெரியாது. என் ஐயா என்ன தொழில் செய்தார் என்ற விவரமும் எனக்குத் தெரியாது. என் ஐயா மலேசியாவில் இருந்தாரா என்றால் முதலில் மலேசியாவில் இருந்தார். கடைசி காலத்தில் இந்தியாவில் இருந்தார். மலேசியாவில் அவர் என்ன தொழில் செய்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. என் தகப்பனார் மலேசியாவில் இருந்ததாக கூறினார்கள். அவர் அங்கு என்ன தொழில் செய்தார் என்ற விவரமும் எனக்குத் தெரியாது. என் தகப்பனார் மலேசியாவிற்கு சென்றது தொழில் செய்யத்தான் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் தகப்பனார் இங்கு இல்லாத காலத்தில் என்னையும், என் தம்பி வாதி மற்றும் குடும்பத்தையும் பராமரித்தது என் தாயார் தான் என்றால் சரிதான். என் அம்மா குடும்பத்தினை பராமரிப்பதற்கு எனது தகப்பனார் மலேசியாவிலிருந்து

என் அம்மாவிற்கு பணம் அனுப்பி வந்தார் என்றால் அவர் பணம் எதுவும் அனுப்பவில்லை. வருடத்திற்கு எத்தனை முறை என் தந்தை இந்தியாவிற்கு வருவார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் தகப்பனார் வருடத்திற்கு 2, 3 முறை பணம் கொடுப்பதற்காக இந்தியாவிற்கு வருவார் என்றும், அதை நான் இந்த வழக்கிற்காக மறைத்து பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா கொடுக்கல், வாங்கல் வட்டித் தொழில் செய்து வந்தார் என்றால் இல்லை. என் அம்மா அவர் இறக்கும் வரை வட்டித் தொழில் செய்தார் என்றும், இந்த வழக்கிற்காக நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா உயிருடன் இருந்த போது நாட்டரசன்கோட்டை மற்றும் மதுரை ஆகிய ஊர்களில் வங்கிக் கணக்கும், நிரந்தர வைப்புநிதியும் வைத்திருந்தார் என்றால் சரிதான். என் அம்மா இறக்கும் போது அவர் வசம் எவ்வளவு தங்க நகைகள் மற்றும் வைர நகைகள் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்று கேட்டால், என் அம்மாவிடம் அப்போது எதுவும் இல்லை. என் அம்மா இறக்கும் போது நிறைய தங்க நகைகள் மற்றும் வைர நகைகள் இருந்தது என்றும், வழக்கிற்காக நான் அதை மறைத்து பொய்யாக சொல்லுகிறேன் என்றால் நாட்டரசன் கோட்டை ஐசிஐசிஐ வங்கி கிளையில் 2 லாக்கர் இருந்தது, அந்த 2 லாக்கரில் E or S-ல் வாதி மற்றும் என் தாயாரின் பெயரில் இருந்தது. அதில் என்ன இருந்தது என்று வாதிக்குத் தான் தெரியும். நான், என் தம்பி, என் அம்மா ஆகிய நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாகத் தான் இருந்தோம் என்றால் அம்மாவும், நானும் அவர் இறக்கும் வரை என் பராமரிப்பில் தான் இருந்தோம். என் தம்பி அக்காலக்கட்டத்தில் பெங்களூரில் படித்து அங்கேயே வேலை பார்த்து வந்தார். என் அம்மா இறக்கும் போது கையிருப்பு ரொக்கம் எதுவும் இல்லை. அவர் கொடுக்கல், வாங்கல் எதுவும் செய்யவில்லை.

எனது தாயார் இறந்தவுடன் அந்த செய்தி கேட்டவுடன் என் தந்தை உடனே மலேசியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்தார். நாட்டரசன்கோட்டையில் என் அம்மா இருந்த வீட்டில் ஒரு பெட்டகம் இருந்தது என்றால் சரிதான். அந்த பெட்டகத்தில் என் அம்மாவின் நகைகள், ரொக்கப் பணம் ரூ.90,00,000 மற்றும் புரோநோட்டுக்கள் இருந்தது என்றால் இல்லை. அந்த பெட்டகம் என் மனைவியினுடையது. என் அம்மா இறக்கும் போது வாதி சந்திரன் ஊரில் இல்லை என்றால் இருந்தார். என் அம்மாவின் இறப்பிற்கு அவர் வந்தார். என் அம்மா இறக்கும் போது வாதி ஊரில் இல்லை என்றும், வழக்கிற்காக அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயாரின் ஈமச்சடங்கிற்குப் பிறகு என் அப்பா என்னிடம் 1500 பவுன் தங்க நகைகள் மற்றும் ரூ.90,00,000/- ரொக்கம் மற்றும் புரோநோட்டுக்களை ஒப்படைத்து வரவு, செலவுகளை பார்க்கச் சொல்லிவிட்டு மலேசியா சென்றார் என்றால் இல்லை. மேற்படி விவரத்தை இவ்வழக்கிற்காக மறைத்து பொய்யாக சொல்லுகிறேன் என்றால் இல்லை. என் அப்பா ஒப்படைத்து சென்ற நகை மற்றும் பணம் ஆகியவற்றை வைத்து தொழிலை மேம்படுத்தி பணத்தை பெருக்கி வாதி வந்த பிறகு சொத்துக்களை பிரிக்கும் போது பணம், நகைகளை பிரித்துக் கொள்ளலாம் என்றும், அதுவரை அவை அனைத்தும் என் வசம் பத்திரமாக இருக்கட்டும் என என் அப்பா என்னிடம் ஒப்படைத்துச் சென்றார் என்றால் இல்லை. மேற்படி விவரத்தை இவ்வழக்கிற்காக மறைத்து அதை அபகரிக்கும் நோக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த உண்மையெல்லாம் என் தகப்பனார் மலேசியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்து சாட்சியம் கூறிவிடுவார் என்று அவரை இந்தியா வரவிடாமல் செய்ய சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில்

பொய் புகார் கொடுத்து அந்த வழக்கில் பிடியாணை உள்ளது என்றால் சரியல்ல. ஆனால் உயர்நீதிமன்ற உத்தரவின் படி பிடியாணை உள்ளது. தாவா சொத்துக்கள் எல்லாம் பாகப்பிரிவினை செய்யப்படாத சொத்துக்கள் என்றால் சரியல்ல. வாதியையும், 1-ம் பிரதிவாதியையும் மோசம் செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யாக நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(4 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.)

குறுக்கு விசாரணை வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.